**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – தரம் உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் – முதுகலை ஆசிரியர் (வணிகவியல் மற்றும் பொருளியல் ) 90 தற்காலிக பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது – 01.01.2016 முதல் 31.12.2016 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்(பக2(1))துறை**

அரசாணை(1 டி) எண்.52

நாள்: 08.02.2016
திருவள்ளுவராண்டு 2047
தை மாதம் 25ஆம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.282, ப.க.(மேநிக2)துறை, நாள் 03.11.2009.
2. அரசாணை(1டி) எண்.57, பள்ளிக் கல்வி(ப.க2(1)த் துறை, நாள்–23.02.2015.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண்.089653/எல்3/2015, நாள்–29.12.2015.

--------

**ஆணை:**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் 1990–91 மற்றும் 2002–03ஆம் ஆண்டு முதல் 2006–07ஆம் ஆண்டு வரை அரசு மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் 45 பள்ளிகளுக்கு 45 முதுகலை ஆசிரியர் (வணிகவியல்) மற்றும் 45 முதுகலை ஆசிரியர் (பொருளியல்) ஆக மொத்தம் 90 தற்காலிக முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800/– என திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்காணும் 90 முதுகலை ஆசிரியர் (45 வணிகவியல் மற்றும் 45 பொருளியல்) பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள 45 முதுகலை ஆசிரியர் (வணிகவியல்) மற்றும் 45 முதுகலை ஆசிரியர் (பொருளியல்) ஆக மொத்தம் 90 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 31.12.2015 உடன் தொடர் நீட்டிப்பு காலம் முடிவடைந்துள்ள நிலையில், 01.01.2016 முதல் மேலும் 5 ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 90 முதுகலை ஆசிரியர் (வணிகவியல் மற்றும் பொருளியல்) தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 31.12.2016 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அது வரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202–பொதுக்கல்வி–02–இடைநிலைக் கல்வி –109–அரசு இடைநிலைப் பள்ளிகள் –I திட்டத்தில் சேராதது–AA-அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் 01–சம்பளங்கள்."
(த.தொ.கு 2202–02–109–AA–0108)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.5711/Edn-II/2016, நாள்–04.02.2016ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.

<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி நகல்

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

சா. பரிமளவல்லி 8/2/16
பிரிவு அலுவலர்.